

**செல்வி. சு. அமுதசாந்தி,**

**BEST SOCIAL WORKER**

**செல்வி. சு. அமுதசாந்தி** என்பவர் கடந்த 16 ஆண்டுகளாக தியாகம் பெண்கள் அறக்கட்டளையின் நிர்வாகியாக சமூகப் பணியாற்றி வருகிறார்.

மேலும், அன்னார், கை இழந்த மாற்றுத்திறனாளியாக இருந்தும், பெண் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் பெருகி சுயமாக சுயதொழில் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தனது அறக்கட்டளையின் மூலம் பெண் மாற்றுத்திறனாளிகளுக்கு தையல் பயிற்சி, கணினி பயிற்சி, கைவினைப் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி ஆகியவற்றை வழங்கியும் சுய உதவிக் குழு அமைத்தும் சமூகப் பணியாற்றி வருகிறார். மேலும் பெண்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல் மையம், மாற்றுத்திறனாளிகளுக்கான விடுதியும் செயல்படுத்தி வருகிறார்.

மேலும், கல்வி பயிலும் 25 கிராமங்களைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு மாலை நேர வகுப்புகள், மாற்றுத்திறனாளிகளுக்கு ஆலோசனை மற்றும் மறுவாழ்வு உதவிகள் ஆகியவற்றை வழங்கியுள்ளார்.

இவ்வாறு மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வில், மிகுந்த அக்கறை கொண்டு தொடர்ந்து அவர்களுக்கு பல்வேறு வகையான சேவைகளை செய்து வரும் செல்வி.சு.அமுதசாந்தி அவர்களைப் பாராட்டி, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த சமூகப் பணியாளருக்கான தமிழக அரசின் விருது வழங்கப்படுகிறது.

**TMT. S. AMUTHA SHANTHI,** has been associated with "Thiyagam Women's Trust" for the past 16 years. In spite of her disabilities she has been working for the economic empowerment of women through her trust; she has involved in imparting vocational training (in tailoring trade, handicrafts, computer training) and organizing self help group. Moreover she has also provided counseling services and established guidance centre and hostel for differently abled women. She has helped more than 5280 DAPs to get education services.

Hence recognizing her above outstanding services, Tmt.Amutha shanthi has been awarded "**Best Social Worker"** award.